# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**


**ஆணை நாள்: 04.03.2025**

**முன்னிலை**

**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

…………

**வழக்கு எண். SA10510/F/2023**

திரு. கோ.ராஜி ... மனுதாரர்

/ எதிர் /

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
வானூர் (இ), திருச்சிற்றம்பலம்,
கூட்டுரோடு, விழுப்புரம் மாவட்டம் 605 111. ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **03.04.2023** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **09.05.2023** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **10.06.2023** |

******

**ஆணை**

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.03.2025 அன்று முற்பகல் ஆணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய தின விசாரணையில் மனுதாரர் திரு.கோ.ராஜி அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு. அ.பாஸ்கரன், பொதுத் தகவல் அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ), வட்டார வளர்ச்சி அலுவலகம், வானூர் (இ), திருச்சிற்றம்பலம், கூட்டுரோடு, விழுப்புரம் மாவட்டம். அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 03.04.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், வானூர் ஒன்றியம் புளிச்சப்பள்ளம் கிராம பஞ்சாயத்தில் கடந்த ஆண்டுகளில் 01.10.2021ம் தேதி முதல் 03.2023 தேதி வரையிலான காலத்தின் கூட்டக் குறிப்பேட்டின் அனைத்து பக்கங்களின் நகல், என்னென்ன சிவில் பணிகள் கட்டுமானங்கள் குழாய் இணைப்பு தெரு விளக்கு அமைத்தல், சாலை பாலம் அமைத்தல், ஆழ்துணை கிணறுகள் அமைக்கல் கட்டிடங்கள் கட்டுதல் என நடைபெற்ற புதிய மற்றும் பழுது பார்ப்பு பணிகள் (M Book), மேற்படி காலத்தில் என்னென்ன விதமான செலவுகள் மேற்படி புளிச்சம்பள்ளம் கிராம பஞ்சாயத்தில் அந்த செலவுகள் ஒவ்வொன்றிற்கும் உள்ள செலவு சீட்டுகளின் அனைத்து நகலினையும், என்னென்ன விதமான நிதி வரவுகள் வந்துள்ளன அரசு நிதிகள் செலுத்துப்பட்டுள்ளது என்பது போன்ற தகவல்களை 6 இனங்களில் தகவலாக வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காத காரணத்தால், மனுதாரர் 09.05.2023 நாளிட்ட பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால் மனுதாரர் 10.06.2023 நாளிட்ட பிரிவு 19(3)இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.03.2025 அன்று முற்பகல் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், 03.03.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை ஆணையத்திற்கும், மனுதாரருக்கும் நேரில் சமர்ப்பிக்க கொண்டு வந்துள்ளதாக தெரிவித்து, ஆணையத்தில் சமர்ப்பித்தார். மேலும் ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க முழுமையான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், இதுநாள் வரையில் எவ்வித தகவல்களையும் பொதுத் தகவல் அலுவலர் வழங்கவில்லை என ஆணையத்தில் தெரிவித்தார். மேலும், உரிய காலத்திற்குள் முழுமையான தகவல் வழங்காத பொதுத் தகவல் அலுவலர் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் பதிலையும் ஆணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு ஏறக்குறைய 268 பக்கங்களுக்கான கட்டணத்தை உரிய காலத்திற்குள் தகவல் வழங்காத காரணத்தால் வசூலிக்காமல் அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளது தெரிய வருகிறது. ஆணையம் இதனை வன்மையாக கண்டிக்கிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-

- ***மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் முழுமையான தகவல் வழங்காமல், ஏறக்குறைய 268 பக்கங்களுக்கு ரூ.2/- வீதம் ரூ.536/- கட்டணம் வசூலிக்காமல் அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ள திரு.அ. பாஸ்கரன் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல***

*விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு 17.03.2025 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.*

- *மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரிய அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகலினை இவ்வாணையத்திற்கு 17.03.2025 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.*

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA10510/F/2023**

**பெறுநர்**

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
வானூர் (இ), திருச்சிற்றம்பலம்,
கூட்டுரோடு, விழுப்புரம் மாவட்டம் 605 111.

**மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்**

திரு. கோ.ராஜி, த/பெ. கோவிந்தசாமி,
எண். 2/142, கிருஷ்ணாபுரம் தெரு,
புளிச்சப்பள்ளம் கிராமம்,
வானூர் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம் - 605 109

Copy to: Judgement File/ Spare.
JE/PA 05.03.2025